முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.177/2016**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 08.06.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 08.06.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர். | தவகுரு | வயது.. | 76 |
| தந்தை பெயர். | சீதாபதி பிள்ளை | கிராமம்.. | பின்னத்தூர் கிழக்கு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. 2016 இல் வழக்கு தாக்கல் செய்யும் போது தனிப்பட்ட முறையில் தவகுரு என்ற பெயரில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையின் அடிப்படையில் 2023 இல் தான் பிராதில் hereditary trustee என்று திருத்தம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் எனது அப்பாவின் தாத்தா சிவகொழுந்திற்கு பாத்தியம். அதற்கு மூல பத்திரம் இருக்கிறது. 1895 இல் சிவக்கொழுந்தும், நாராயணபிள்ளையும் பரிவர்த்தனை செய்து கொண்ட வகையில் பாத்தியம். பரிவர்த்தனை பத்திரம் பதிவு செய்யப்பட்டது. மேற்சொன்ன பரிவர்த்தனை பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். அப்போது நான் பிறக்கவில்லைஎ ன்பதால் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். பரிவர்த்தனை படி சிவக்கொழுத்துற்கு 40 ஏக்கர் கிடைத்தது. அதன் சர்வே எண். சொல்லமுடியுமா என்றால் சில ஐட்டங்களுக்கு தெரியும். வழக்கு சொத்து 40 ஏக்கரில் உட்பட்டதாகும்.

2. பரிவர்த்தனை பத்திரத்திற்கு மூல பத்திரம் உள்ளதா என்றால் உள்ள,து, 1786 இல் உள்ளது. பரிவர்த்தனையில் சொத்து கிடைக்கப்பெற்று சிவக்கொழுந்து வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்பதற்கு ஆதார ஆவணம் உள்ளது. என்ன ஆதாரம் என்றால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 40 ஏக்கருக்கு சிவக்கொழுந்து பெயரில் பட்டா மாறியுள்ளது. மேற்சொன்ன பழைய பட்டா எண்.411, புதிய பட்டா எண். வாங்கவில்லை. 40 ஏக்கருக்கும் பட்டா எண்.411 தான்.

பட்டா புத்தகம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. சிவக்கொழுந்து வழக்கு சொத்திற்கு Trustee ஆக செயல்பட்டு வந்தார் என்பதற்கு எழுத்துபூர்வ ஆதாரம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களும், Audit புத்தகம் உள்ளது, Audit புத்தகம் தாக்கல் செய்யவில்லை. Audit புத்தகம் தவிர வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

3. 40 ஏக்கர் சிவக்கொழுந்தின் பூர்வீக சொத்தாகும். சிவக்கொழுந்துவுடன் பிறந்தவர்கள் 5 பேர் இருப்பார்கள், சின்னய்யா பிள்ளை, வரதராஜன், தில்லை கோவிந்தன், மற்றவர் ஞாபகம் இல்லை. சகோதரர்கள் அல்லாமல் சிவக்கொழுந்துவிற்கு பரிவர்த்தனை பத்திரம் தனியாக ஏற்பட்டதாகும். பரிவர்த்தனை பத்திரம் பற்றி பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. சிவக்கொழுந்து பரிவர்த்தனை மூலம் கிடைத்த சொத்துக்களில் வருமானம் வைத்து மாசி மக உற்சவம் செய்து வந்தார். உற்சவம் செய்து வந்ததற்கான வரவு செலவு புத்தகம் இருக்கிறது. வரவு செலவு புத்தகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சிவக்கொழுந்து எப்போது இறந்தார் என்று ஞாபகம் இல்லை. சிவக்கொழுந்திற்கு 4 பிள்ளைகளாகும் அவர்கள் ராஜகோபால், எத்திராஜ், சிதம்பரம், இராமானுஜமாகும். சிவக்கொழுந்துவின் மனைவி இறந்துவிட்டார் எப்போது இறந்தார் என்று ஞாபகம் இல்லை.

4. சிவக்கொழுந்து இறந்து தோராயமாக எத்தனை ஆண்டுகள் என்று ஞாபகம் இல்லை. சிவக்கொழுந்துவிற்கு பிறகு 4 மகன்கள் தான் வழக்கு சொத்தை நிர்வகித்து வருகிறார்களா என்றால் 3 மகன்கள் நிர்வகித்து வருகிறார்கள் ஒரு மகன் சுவிகார புத்திரன் ஆகிவிட்டார். சிதம்பரத்தை சொந்தகாரரான பிருந்தாவனத்தம்மாள் சுவிகாரம் எடுத்துக்கொண்டார். எந்த வருடம் சுவிகாரம் எடுத்துக்கொண்டார் என்று ஞாபகம் இல்லை. சுவிகார பத்திரம் இருக்கிறது.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.